Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10


# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (30-7-66) இதழ் 170

பராபவ ஆடி 14 ரபி: ஆகி 11 சனிக்கிழமை




## லண்டனில் பர்மிய பிரதமர்

லண்டன், ஜூலை 29 பர்மிய பிரதமர் ஜெனரல் நீவின் இப்பொழுது இங்கிலாந்தில் விஜயம் செய்து வருகிறார். அவரை நேற்று எலிசபெத் ராணி தமது இருப்பிடமான பக்கிங்ஹாம் மாளிகையில் வரவேற்றார். (பி. டி. ஸி.)

# புதிய வரிகள் இல்லை; மாவு விலை 5 சதம உயர்வு

## உணவு, மதுபானம், கார் இறக்குமதி தீர்வை குறைவு

## சிகரட், பெட்ரோல், வருமான வரியில் மாறுதல் இல்லை

### அபிவிருத்திக்கு பெருந்தொகை முதலீடு

—நமது நிருபர் கே. நடராஜா—

கொழும்பு, வெள்ளி

ஒருஇருத்தல் கோதுமை மாவின்விலையில் ஐந்துசதம் உயர்வு. (இப்பொழுது இருத்தல் 25 சதமாக விற்கும் மா இனி 30 சதமாக விலை உயரும்.) இதனால் பாண், ரொட்டி விலை உயரலாம்.

★ வருமான வரியில் உயர்வு எதுவும் இல்லை.

★ சிகரெட், பெட்ரோல் விலையில் மாற்றம் இல்லை.

★ உணவுப்பொருள். மதுபான வகைகள், மின்சார உபகரணங்கள், நடுத்தர கார், லொறி முதலிய வாகனங்கள், பத்திரிகைக் காகிதம் ஆகியவைகளுக்கான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்படவிருக்கின்றன.

★ புதிய ஜவுளி வரி ஒன்றை கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் பொறுப்பேற்க வேண்டிவரும், ஜவுளி இறக்குமதி உரிமை முழுவதும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா தமது வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்டுவதற்குத் தெரிவித்த முக்கியமான யோசனைகளே இவைகளாகும்.

தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது வரவு—செலவுத்திட்டத்தில் துண்டு விழும் 90 கோடியே 80 லட்சம் ரூபாவையும் எப்படிச் சமாளிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்பது பற்றி நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயகா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய தமது வரவு—செலவுத் திட்ட உரையில் தெரிவித்தார்.

உள்நாட்டில் கடன் எழுப்புவதன் மூலம் முப்பத்திரண்டு கோடி ஐம்பது லட்சம் (32 கோடி 50 லட்சம்) ரூபாயும் அர
[illegible]

கடன் எழுப்புவதன் மூலம் இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாயும் வெளிநாட்டு உதவி மூலம் பன்னிரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாயும் (12 கோடி 50 லட்சம்) வெளிநாட்டுப் பண்டமாற்று உதவி மூலம் பதினைந்து கோடி ரூபாயும் கிடைக்குமென்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார். எனவே மிகுதியாயுள்ள 15 கோடி 80 லட்சம் ரூபாயையும் பின்வரும் முறையில் சரிக்கட்ட உத்தேசித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

### இறக்குமதித் தீர்வை

இறக்குமதித் தீர்வைகளைத் திருத்தி அமைப்பதன் மூலம் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாயும் இறக்குமதியை அதிகரிப்பதன் மூலம் இரண்டு கோடி ரூபாயும் மேலதிக வர்த்தக விற்பனை வரி மூலம் மூன்று கோடி ரூபாயும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய ஜவுளி இறக்குமதி லைசென்ஸ் மூலம் ஒரு கோடி ரூபாயும் ஒரு இருத்தல்மாவின் விலையில் ஐந்து சதமாக அதிகரிக்கப்படுவதன் மூலம் இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாயும் எதிர்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆறு எம். பி.க்கள் வெளிநடப்பு!

### நிதிமந்திரியின் ஆங்கில பட்ஜட் உரையை ஆட்சேபித்து

கொழும்பு, வெள்ளி

நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா, இன்று வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் நிகழ்த்தியதை ஆட்சேபித்து எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் 6 பேர் இன்று பார்லிமெண்ட் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

எதிர்க்கட்சி அங்கத்தவரும் ஹபரடுவ எம். பி.யுமான திரு பிறின்ஸ் குணசேகரா நிதி மந்திரியின் பட்ஜட் ஆங்கில உரையை கண்டித்து முதலில் வெளிநடப்பு செய்ய அவரைத் தொடர்ந்து ஐந்து எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்பு செய்தனர்

### சபையின் அனுமதியுடன்

வரவு செலவுத் திட்ட பிரசங்கத்தின் சில வரிகளை முதலில் சிங்களத்தில் நிகழ்த்திய நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா, சபையின் அனுமதியுடன் பின்னர் பட்ஜட் உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தத் தொடங்கினார், இதனை ஆட்சேபித்த ஆறு அங்கத்தவர்களும் வெளிநடப்பு செய்தனர்.

திருவாளர்கள் முதியன்சே தென்னக்கோன், டி எல் சமரசிங்கா, டி பி எம் ஹேரத், டிவை குடாவே ஆகியோர் வெளிநடப்பு செய்த எம். பி.க்களாவர்.

### "சிங்களத்துக்கு இடமில்லை"

சபையை விட்டு வெளியேறு முன்னர் திரு. பிறின்ஸ் குணசேகரா; "சிங்களத்துக்கு இங்கு இடம் கொடுக்கப்படவில்லை. இதனை ஆட்சேபித்தே நான் இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றேன்" என்று கூறினார்.

பிறின்ஸ் குணசேகரா இப்படிக் கூறியதும் அரசாங்க கட்சி அங்கத்தவரொருவர் எழுந்து நின்று; "பணம் பெறுவதற்கு மட்டும் நீர் நீதிமன்றங்களில் ஆங்கிலம் பேச முடியுமோ" என்று கத்தினார்! திரு. பிறின்ஸ் குணசேகரா ஒரு வழக்கறி

(8-ம் பக்கம் பார்க்க)

## 3 கார் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் நூறாவதுசிட்டிழுப்பில் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
48 C 0632 ரூ 1,00,000

இரண்டாவது பரிசு
32 W 0064 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
58 B 0916 ரூ. 10,000

(5-ம் பக்கம் பார்க்க)

## உதவியளிக்கும் வெளிநாடுகள் விபரம்

கொழும்பு, வெள்ளி

தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தில் எந்த விதமான எதிர்பாராத அதிர்ச்சிகளெதுவும் இருக்கவில்லை. பொதுவாக பலதரப்பட்ட மக்களுக்கும் நிதி அமைச்சர் இந்தவரவு-செலவுத்திட்டம்ஆறுதலளித்திருக்கிறது.

அபிவிருத்தியில்தான் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் 76 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கை] பெறும் உதவிகளைப்பற்றிய வெள்ளை அறிக்கையொன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

### உதவி விபரம்

உதவியளிக்கும் வெளிநாடுகளும் தொகையும் விபரம் வருமாறு:

கனடா - 42 லட்சம் டாலர்; பிரான்ஸ்- 85 லட்சம் டாலர்; மேற்கு ஜெர்மனி-63 லட்சம் டாலர்; பிரிட்டன் – ஒரு கோடி டாலர்; ஜப்பான்ஒருகோடி டாலர்; அமெரிக்கா ஒன்றரைக்கோடி டாலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காணி

வீடு, தொழிற்சாலை கட்ட உகந்த காணி, 25 பரப்புக்கு மேல், துண்டு துண்டாகவும், முழுவதுமாகவும் வாங்கலாம். பள்ளிக்கூடங்களுக்கு சமீபத்தில். புகையிரத நிலையம் சமீபம். விபரங்கள்: சுவாமி 64 அரசடி வீதி, வண்ணார்பண்ணை. 797

மில் விற்பனைக்கு

அரிசி - மா - தூள் - சிறிய நெல் கிறைண்டர்களுடன் டீசெல் என்ஜின் இணைவுற்ற மில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: உரிமையாளர், கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 304

### வாடகைக்கு

கடை

யாழ்ப்பாணம் கண்டி ரோட்டில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் உடைய கடை வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. கணபதிப்பிள்ளை பொலிகண்டி வல்வெட்டித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 798

### கல்வி

வகுப்புகள்

ஜீ. சி. ஈ. சாதாரணம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம். சிங்களம், ஆங்கிலம், தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழில் ஆங்கிலத்தில். தினசரி காலை மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். பெண்கள் கிளை-29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 800

## அயர்லாந்தில் மதக்கலவரம்

லண்டன், ஜூலை 29. நள்ளிரவில் கத்தோலிக்க வீடுகளுக்குப் பெட்ரோல் கைக்குண்டுகள் வீசப்பட்டதைத்தொடர்ந்து அயர்லாந்திலுள்ள வடபெல்பாஸ்ட் நகரைச்சுற்றிப்பொலிசார் காவல்போட்டனர். கைக்குண்டு வீச்சைத்தொடர்ந்து இந்நகரில் ஏற்பட்டுள்ள மதக்கலவரம் மேலும் சூடேறியுள்ளது. புரொட்டஸ்தாந்த் தீவிரவாதிகளுக்கும் கத்தோலிக்கருக்குமிடையே கடந்தசில தினங்களாக மோதல் ஏற்பட்டுள்ளது.

(பி.டி.சி)

## மா.பொ. சிக்கு வரவேற்பு ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி தமிழரசு கழக தலைவர் திரு.மா.பொ.சிவஞானகிராமணியாருக்கு கொழும்பில் பிரமாண்டமான வரவேற்பு அளிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிலம்புச்செல்வர் மா.பொ.சியின் மணிவிழா குறித்து கொழும்பைச் சேர்ந்த சகல மன்றங்களும் பாராட்டுக் கூட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இப்பாராட்டு வைபவத்திற்கான ஒழுங்குகளை இலங்கை மா.பொ.சி, மன்றம், இலங்கை தி.மு.கழகம் உட்பட பல மன்றங்கள் மேற்கொண்டுள்ளன.

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பசுபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## பொற்கிழி வழங்குதல்

A. D. சுப்பிரமணியம் தம்பதிகட்குப் பொற்கிழி வழங்கல் ஆவணி மாதம். பழைய மாணவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் பணம் அனுப்பும் விலாசம்:

அ. சண்முகம்,
ஆசிரியர்
கட்டைவேலி,
901 கரவெட்டி.

## ரூபா 75 அபராதம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

எஸ். ஜெயபாலன் என்பவர் கள்ளத்தனமாகச் சாராயம் விற்ற குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ரூபேர்ட் சில்வா, அவருக்கு 75 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.




## கொழும்பு

சனி 30 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள் 5-15 மாணவர் மன்றம், 5-45 இசைமெட்டு

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம்—மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர்விருப்பம்.

## விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
திருகோணமலைக் கச்சேரி

என் 1822— திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாராயத் தவறணைகளில் 7-8-66 தொடக்கம் 30-9-66 வரைக்கும் சாராயம் விற்கும் உரிமை 6-8-66ல் விற்கப்படும்.

நீர்ப்பாசனப்பகுதி

என் 1804 முல்லைத்தீவு உபபிரிவில் வேலைகள். கேள்விகள் முடிவு திகதி 16-8-66. என் 1810 செங்கலடி உபபிரிவிலுள்ள புனானை அணைக்கட்டின்கீழ் வலதுகை பிரதான வாய்க்கால் வெட்டுதல் கேள்விகள் முடிவு திகதி 9-8-66.

இதன் முழு விபரங்களுக்கும் 29-7-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 3791

## கேள்வி விளம்பரம்

இத்தால் சகலரும் அறியத்தருவது தெல்லிப்பழை கிராமசபை அக்கிராசனரால் சனிக்கிழமை (6-8-66) காலை 9-30 மணி வரை கீழ் காட்டிய வேலைகளுக்கு சீல் வைத்த ரெண்டர்கள் அழைக்கப்படுகின்றன. காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படவேண்டும். கேள்வியின் நகல் பிரதி ஒன்று உள்ளூர் ஆட்சி உதவி அதிபர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு பதிவுத் தபாலில் அதே நேரத்தில் அனுப்பப்படல்வேண்டும். ரெண்டர் பத்திரம், ரெண்டர் பத்திரத்திற்குரிய பணம் கட்டிய தன்பெயரில் கிராமசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். வேறுவிபரங்கள் கிராமசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலையின் பெயர்

1. சிராவலை - களனைஒழுங்கை திருத்தவேலை. ரெண்டர் பத்திரப்பணம் ரூ. 55/-
2. வளவர்கோன்பள்ளம் இறைதிருத்தவேலை. ரெண்டர் பத்திரப் பணம் ரூ. 25/-
3. கீரிமலை பஸ்காலை திருத்தவேலை. ரெண்டர் பத்திரப்பணம் ரூ. 25/-

(ஒப்பம்) த.செல்வரத்தினம்,
அக்கிராசனர்,
தெல்லிப்பழைகிராமசபை.
கிராமசபைக் காரியாலயம்,
தெல்லிப்பழை 26-7-66
700

## அறிவித்தல்

அரசாங்க வர்த்தமானியில் (Gazette) வரும் எல்லா விண்ணப்பப்பத்திரங்களும், கடிதங்கள், பெட்டிசங்கள் முதலியன டைப் செய்து கொடுக்கப்படும்.

யாழ். கல்லூரி,
426, ஆஸ்பத்திரிரோட்டு,
698 யாழ்ப்பாணம்.

முல்லைத்தீவு
பல. நோ. கூ. ச.
சமாஜத்திற்கு

## மனேச்சர் தேவை

மேற்படி சமாஜத்திற்கு மனேச்சர் தேவை. விண்ணப்பங்கள் காரியதரிசி, பல. நோ. கூ. ச. சமாஜம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு 15-8-66-க்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும். மேல் உறையில் ''மனேச்சர் பதவி'' என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தகைமை: எஸ். எஸ். சி. அல்லது க. பொ. த. பத்திரம் (ஆங்கிலம்) ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி எய்தியவராக இருத்தல்வேண்டும். கணக்கில் விசேடசித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சி (சாதாரணம்) யுடையவர் விரும்பத்தக்கது.

சங்கத்தில் வேலை செய்தோர் அச்சங்கத் தலைவரின் கடிதம் சமர்ப்பிக்கவேண்டும். கடிதத்தில் சேர்வுபற்றிய விபரங்கள் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

வயது: 25 தொடக்கம் 40 வரை.

பிணை: ரூ. 2000/- ரொக்கப்பிணையாகவும் ரூ. 5000/- காணிப்பிணையாகவும் செலுத்தல்வேண்டும்

சம்பளம்: ரூ. 200/—350/- 10 ரூபா. 15/-

வே. விஜயரத்தினம்,
696 காரியதரிசி.

## பதவியேற்றது

ஜாகர்த்தா, ஜூலை 29 இந்தோனேஷியாவின் புதிய மந்திரிசபை நேற்று பதவியேற்றது.


கோவில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

# அபிஷேக சந்தனம்

கோவில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்,
பரிமளம் நிறைந்த சந்தனவில்லைகள்

## விளைவு சூடம்

கிடைக்குமிடம்:

## சுந்தரம் பிறதர்ஸ்

( மருந்துச்சரக்கு வியாபாரம் )

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## அந்தியகால சகாய நிதிச்சங்கம் லிமிற்றெட்

(பதிவு இல. S - 132)

330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கடந்த 11 ஆண்டுகளில் இறந்த 953 அங்கத்தவர்கள் பேரால் மரண சகாயப்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 601,390-82 ரூ. 125,000-00 பெறுமதியான ஆதனமொன்றைத் தன்னுடையதாக வைத்திருக்கிறது. அங்கத்தவர்கள் தொகை 1100. 55 வயதிற்குட்பட்ட தேகசுகமுள்ள ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். மாதச் சந்தா ரூபா: 5/- சேர்ந்து ஆறுமாதத்தின்பின் மரணமேற்படின் ரூபா 350/- வழங்கப்படும். மேற்கொண்ட ஒவ்வொரு வருடத்திற்கும் சங்க விதிகளுக்கமைய சகாயம் கூட்டி வழங்கப்படும். அங்கத்துவம் பெறுவதற்கு முந்துங்கள். விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முதலியார் செ. முத்துத்தம்பி, தலைவர்,
டாக்டர் வ. த. பசுபதி, தனாதிகாரி.
இ. சோமலிங்கம், காரியதரிசி.

## நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி
நடித்த

## சர்வாதிகாரி

## ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்

GELIG
NITE GANG

## கிலிக் நிற்ட் காங்

## REGAL—JAFFNA

at 4-30 p.m. Only
Janet Munro
in

## BITTER HARVEST

(Color) ( ADULTS ONLY )

மாலை 6-30க்கும்
இரவு 10க்கும்

## திருவிளையாடல்

(கலர் படம்)

## மகாத்மா தியேட்டர்

(கரவெட்டி)

எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
நடித்த
"பூமாலை"

## 5-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்

# "வெண்ணிற ஆடை"

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த

## எங்க வீட்டுப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு ஆசியா மீது யுத்த மேகங்கள்!

## ஐ. நா. வுக்கு ஒரு பெரிய சவாலென யுதான்ட் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 29

தென்கிழக்கு ஆசியாவை எதிர்நோக்கியுள்ள யுத்த அபாயம் ஐ. நா. வுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. ஐ.நா. நிறுவிய பின்னர், முன் என்றுமே இல்லாத வகையில் யுத்த மேகங்கள் திரண்டிருக்கின்றன என்று ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் எச்சரிக்கை செய்துள்ளார்.

ரஷ்யாவுக்கு விஜயம் செய்த யுதாண்ட் நேற்று லெனின் கிராட் நகரசபை அளித்த வரவேற்பில் பேசுகையில்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; யுத்த மேகங்களின் கடினத்தை மக்கள் உணரக் கூடியதாக இருக்கிறதென்றும் இப்பொழுது உலகை எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகள் நீடித்துக்கொண்டே செல்லுமானால் மற்றுமொரு பேரபாயத்தை மக்கள் எதிர்நோக்க நேரிடும் என்றும் கூறினர்.

### நியுயோர்க் புறப்பாடு

ஐ.நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் இன்று மாஸ்கோவை விட்டுப் புறப்படுவதாக இருந்தார். ஆனால் ஒரு நாள் தாமதித்து நாளை சனிக்கிழமை நியுயோர்க் திரும்புவதென்று பின்னர் முடிவு செய்யப்பட்டது.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### வேலையில்லை; தற்கொலை

அறந்தாங்கி, ஜூலை 29

பழைய இராணுவ வீரரான துரைராஜா என்பவர் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். வேலை கிடைக்காததால் மனம் உடைந்து அவர் இந்த முடிவுக்கு வந்தார் என்று அறியப்படுகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தில் சேர்ந்த இவர் சேவை முடிந்தபின், கடந்த மூன்று மாதத்தின் பின் ஊர் திரும்பினர்.

ஃ ஃ ஃ

### பஸ்ஸில் பணம்!

சென்னை, ஜூலை 22

சென்னை அரசாங்க பஸ்ஸில் சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள நோட்டுக்கள் கேட்பாரற்றுக் கிடந்தன. அவற்றை பஸ் கண்டக்டர் கண்டெடுத்து பஸ் போக்குவரத்து இலாகா கந்தோரில் ஒப்படைத்தார்.

இதேபோல் பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் ஒன்றும், காதணி ஒன்றும் பஸ் போக்குவரத்து இலாகா கந்தோரில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சென்னை, ஜூலை 28

தமிழ்நாடு சட்டசபையில் பக்தவத்சலம் மந்திரிசபை மீது திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறது. இத்தகவலை தி. மு. க. சட்டசபை அங்கத்தவர் அன்பு தர்மலிங்கம் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வைத் தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது என்று கூறி தி. மு. கழகமும், சுதந்திராகட்சியும் சேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரும் என்று அவர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### தடை உத்தரவு

சென்னை ஜூலை 29

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் ஆரம்பமாவதையொட்டி சென்னையில் பொலிஸ் தடைஉத்தரவு போடப்பட்டுள்ளது.

ஆகஸ்டு 1-ம் திகதி சட்டசபைக்கூட்டம் ஆரம்பமாகின்றது. இதையொட்டி சென்னை நகர பெரிய பொலிஸ் அதிகாரி சிங்காரவேலு ஒரு தடைஉத்தரவு பிறப்பித்திருக்கிறார். அதன்படி சட்டசபையைச்சுற்றி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது. இந்தத் தடை உத்தரவு ஆகஸ்ட் 15-ம் திகதிவரை அமுலில் இருக்கும்.

ஃ ஃ ஃ

### காங்கிரஸில் சேரமாட்டேன்

சென்னை, ஜூலை 29

நான் எதிர்க்கட்சிக்காரனாகவே இருக்க விரும்புகின்றேன் என்று தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் கூறினர்.

ராயப்பேட்டையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டமொன்றில் திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது! நான் எதிர்க்கட்சிக்காரனாக இருந்து நாட்டிற்கும் மொழிக்கும் சேவை செய்ய விரும்புகிறேன். 1926-ம் ஆண்டுமுதல் காங்கிரஸிலிருந்து சேவை செய்த நான் அதில் இருக்க முடியாமல் வெளியேறினேன். காங்கிரஸில் மீண்டும் சேரமாட்டேன்.

ஃ ஃ ஃ

### கவர்ச்சியான உடை அணிவதற்குத் தடை

பம்பாய், ஜூலை 29

"மாணவிகள் கவர்ச்சியான ஜாக்கெட் அணியக் கூடாது" என்று பம்பாய் கல்லூரியில் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாய் நகரில் கே. ஜே. சோமையா கல்லூரியில் மாணவர்களும் மாணவிகளும் சேர்ந்து படிக்கின்றார்கள். இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களும் மாணவிகளும் இறுக்கமான உடை அணிந்து வந்தார்கள். இதனால் கல்வித்தரமும் ஒழுக்கமும் பாதிக்கப்படுகிறது என்பதை அறிந்த கல்லூரி நிர்வாகத்தினர் புதிய தடையை விதித்துள்ளனர். மாணவிகள் உடல் கவர்ச்சி வெளியே தெரிய உடலை இறுக்கும்படியாக ஆபாசமாக ஜாக்கெட் அணிந்து வரக்கூடாதென்றும் மெல்லிய சேலை கட்டிக் கொண்டு வரக் கூடாதென்றும் தடை செய்யப்பட்டுள்ளது.

## காணமற்போன யுத்தவிமானி

சான் பிரான்ஸிஸ்கோ, ஜூலை 29

காணமற்போன அமெரிக்க பிரிகேடியர் ஜெனரல் ஜோசப் ஸ்டில்வெல், கடந்த நான்கு நாட்களாக வான வெளியிலும், கடலிலும் தேடப்பட்டுவருகிறர். இவரைத் தேடும்முயற்சி இப்பொழுது சான்பிரான்ஸிஸ்கோவுக்கும் ஹொனலுலுவுக்குமிடையேயுள்ள 129,000 சதுரமைல் பரப்புக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஜோசப் ஸ்டில்வெல், வடகரோலினவிலுள்ள அமெரிக்க விசேஷ யுத்த நிலையத்தின் தலைவராவர். இங்கு வியட்நாம் மற்றும் இடங்களுக்கு அனுப்பப்படும் அமெரிக்கத்துருப்புக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவருடையவிமானம் இங்கிருந்து ஹொனலுலுவுக்குச் செல்லும்போது காணமற்போய்விட்டது. (பி.டி.ஸி)

## நாஸர் குற்றச்சாட்டு: பிரிட்டன் மறுப்பு

லண்டன், ஜூலை 29

சவூதி அரேபியாவில் பிரிட்டன் ஓர் புதிய தளத்தை நிறுவி வருகிறதென்ற எகிப்திய ஜனதிபதி நாஸரின் குற்றச்சாட்டை பிரிட்டிஷ் அதிகாரிகள் இங்கு மறுத்துள்ளனர்.

சிவில் உடை தரித்தபிரிட்டிஷ் துருப்புக்கள் சவூதி அரேபியாவில் புதிய தளம் ஒன்றை நிறுவி வருவதாக அலெக்ஸாண்டிரியாவில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் நாஸர் குற்றஞ்சாட்டியிருந்தார். (பி.டி.ஸி)

## ஆசிய தொழில் மந்திரிகள் மாநாடு

மணிலா, ஜூலை 29

ஆசிய தொழில் மந்திரிகள் மாநாடொன்றை பிலிப்பைன்ஸில் நடாத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆசியாவிலுள்ள மனிதசக்திக்கு பயிற்சி நிலையமொன்றை நிறுவுவதற்கான ஆலோசனையை விவாதிக்க இம்மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச தொழில் இயக்க மாநாடு தீர்மானித்திருந்தது. (பி.டி.ஸி)

## தமிழ்ச் சங்கத்துக்கு 1 லட்சம் நன்கொடை

### பக்தவத்சலம் வழங்கினர்

சென்னை, ஜூலை 29

புதுடில்லி தமிழ்ச் சங்கத்துக்கு தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளார். சங்கக் கட்டிட நிதிக்காக இப்பணத்தை அவர் கொடுத்துள்ளார்.

## "அணு ஆயுத உற்பத்தியில் இறங்கவேண்டாம்"

### ஜப்பான் பிரதமர் கோரிக்கை

டோக்கியோ, ஜூலை 29

"சீன அணு ஆயுத உற்பத்தி ஆசியாவுக்குப் பெரும் ஆபத்தாகவே இருக்கிறது" என்று நேற்று இங்கு ஆரம்பமான ஆசிய அணு ஆயுத எதிர்ப்பு மகாநாட்டுக்கு ஜப்பான் பிரதமர் பொட்டோ அனுப்பிய செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அணு ஆயுதங்களைத்தடை செய்வதில் சகல நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் புதிய நாடுகள் அணுஆயுத உற்பத்தியில் இறங்காமல் ஆக்க வேலைகளுக்கு அணு சக்தியைப் பயன் படுத்த வேண்டும் என்றும் அவர் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பேசுகையில், அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கையென்றும் அணுகுண்டு உற்பத்தி செய்யும் நோக்கம் இந்தியாவுக்குக் கிடையாதென்றும் கூறினர்.

## வாயை மூடு!

லண்டன், ஜூலை 29

இங்கு நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் 'எக்கே' எனப் பெயரிடப்பட்ட பேசும் பறவையான இந்திய மைனவின் பேச்சை எலிசபெத் ராணியின் தாயார் கேட்க விரும்பிய போது, அது "வாயை மூடு" என்று கீச்சிட்டது. (பி. டி. ஸி)

## ஆப்கானிஸ்தானுக்கு ஐ. நா. தலைவர் பதவி?

நியுயோர்க், ஜூலை 29

செப்டம்பரில் ஆரம்பமாகும் ஐக்கியநாடுகள் பொதுச் சபையின் தலைவர் போட்டிக்கு ஆப்கானிஸ்தானின் அப்துல் ரஹ்மான் பஷ்வாக் மட்டுமே அபேட்சகராக விருப்பார்.

புவியியல் அடிப்படையில் சுழலும் இத்தலைவர் பதவி இம்முறை ஆசியாவினதாகும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலுள்ள அரசியல்சட்ட வல்லுனர்களில் முதன்மையானவரில் ஒருவர் அப்துல் ரஹ்மான் பஷ்வாக். (பி. டி. ஸி.)

## போர்ச்சுக்கல் ஆக்கிரமிப்பு

நியுயோர், ஜூலை 29

கிழக்காபிரிக்க நாடான ஸாம்பியா, தனது பூமியில் போர்ச்சுக்கல் ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

போர்ச்சுக்கல்தனது ஆக்கிரமிப்பை நிறுத்தாவிடின், ஆக்கிரமிப்பாளரை அகற்ற வேண்டிய நிலை ஸாம்பியாவுக்கு ஏற்படலாமென ஸாம்பியா ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு அறிவித்தல் கொடுத்துள்ளது. (பி. டி. ஸி.)

## வெள்ளத்துக்கு 63 பேர் பலி

சியோல், ஜூலை 29

தென்கொரியாவில், சியோவில் கடும்மழைபெய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 63 பேர் மாண்டனர். 9,000 பேர் வீடிழந்தனர்.

## "கொள்கைவேறு குறிக்கோள்ஒன்று"

திருப்புத்தூர், ஜூலை 29

திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளுக்கிடையே தொகுதி உடன்பாடு மட்டுமே உள்ளதென்றும், அதனதன் கொள்கைகளை விட்டுக் கொடுக்காதென்றும், காங்கிரஸை ஆட்சியிலிருந்து நீக்குவதென்றே அக்கட்சிகளின் குறிக்கோள் என்றும், தி. மு. க. தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

திரு. நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது: கடந்த 18 ஆண்டுகளாக காங்கிரஸின் தவறான போக்கைக் கண்டித்து வந்தோம். சென்னை மாநகராட்சி மன்றத்தை, நாங்கள் கைப்பற்றிய பின்னர், ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அளித்திருக்கும் நன்மைகளை நீங்கள் அறிவீர்கள்.

## விமானத்தை காணவில்லை

வாஷிங்டன், ஜூலை 29

தென் அமெரிக்கா நோக்கி அதி உயரத்தில் சென்று கொண்டிருந்த "யு-2" வேவு விமானத்தை காணவில்லை என்று இங்கு அறிவிக்கப்பட்டது. கடைசியாக இந்த அமெரிக்க விமானம் கியூபா தரையில் தென்பட்டது.

## படையெடுப்புயோசனை வில்ஸன் எதிர்ப்பு

லண்டன், ஜூலை 29

வடக்கு வியட்னாமில் படையெடுக்க வேண்டுமென்ற தென்வியட்னாம் பிரதமரின் யோசனைக்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கருக்கு அதிக சேதம்

சைகோன், ஜூலை 29

வியட்னாம் தரைச் சண்டையில் கடந்த வாரம் அமெரிக்கத் துருப்புகளுக்கு பெருமளவில் சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் எதிரில் தலை துண்டிக்கப்பட்டது

ஏடென், ஜூலை 29

அராபிய நாடான யெமனின் தலைநகரான சானவில் பொதுச் சதுரங்கத்தில் வைத்து ஒரு மனிதன் தலை அரசாங்க உத்தரவினுல் வெட்டப்பட்டது. இன்னும் இரு மனிதரும் ஒரு பெண்ணும் இதே தலைவிதியைக் காத்திருப்பதாக, இங்கு வந்து சேர்ந்த ஐரோப்பிய வர்த்தகப் பிரதிநிதி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

சானவிலுள்ள பள்ளிவாசல் ஒன்றைக் கைக்குண்டு எறிந்து தாக்கியதற்காகவே இந்நால்வருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. கைக்குண்டு வீச்சில் நால்வர் இறந்தனர். பலருக்குக்காயமேற்பட்டது. (பி. டி. ஸி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இயற்கைக்குமுன் மனிதன் பெரும்பாலும் பலம் அற்றவனேயாவான். —மகாத்மாகாந்தி

# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams: EELANADU Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 14 (30-7-66)

## கோரிக்கை நியாயமானாலும்...!

தோட்டத் தொழிலாளருக்கும் 17 ரூபாய் 50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமெனக் கோரி ஜனநாயகத் தொழிலாளக் காங்கிரஸ் நடத்திய வேலைநிறுத்தம் கைவிடப்பட்டு தொழிலாளர் அனைவரும் வேலைக்குத் திரும்பி விட்டனர். இந்த வேலைநிறுத்தம் தொழிலாளருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்.

தொழிலாளரின் கோரிக்கை எவ்வளவுதான் நியாயமானதாக இருப்பினும் தொழிலாளருக்கிடையில் ஒற்றுமை இல்லாதவரை அவர்கள் தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவோ அதற்காக நடத்தும் போராட்டங்களை வெற்றிபெறுவது சாத்தியமில்லை.

வேலைநிறுத்தம் கூர்மையான ஆயுதம். அதைச் சந்தர்ப்பம் பார்த்து, கடைசி முயற்சியாக உபயோகிக்காத வரை, அதனுல், அதை உபயோகிக்கும் தொழிலாளருக்கும் தொழிற் சங்கங்களுக்குமே ஆபத்து நேரிடலாம்.

தொழிலாளர் தமது நியாயமான கோரிக்கைகளைப், பெறுவதற்குநடைத்தும் போராட்டங்கள், தமது சக்தியை நம்பியேயிருக்க வேண்டும். பிறரையும் அரசியல் வாதிகளையும் நம்பி எந்தப் போராட்டத்தையும் ஆரம்பிப்பது விவேகமல்ல.

இதர தொழிலாளருக்கு 17ரூபாய் 50சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்படுகையில்,தோட்டத் தொழிலாளருக்கு அது மறுக்கப்படுறது நியாயமல்ல. தமக்கும் விசேஷ பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமென தோட்டத் தொழிலாளர் கோருவதும் நியாயமே. ஆனுல் இந்தக் கோரிக்கையைப் பெறுவதற்கு வேலை நிறுத்தம் தான் ஒரே வழியல்ல. சம்பள நிர்ணய சபைமுன் இக்கோரிக்கையை சமர்ப்பித்திருக்க வேண்டும். அதன்பின் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்க வேண்டும். இவையாவும் தோல்வியடைந்திருந்தால் தொழிலாளர் அனைவடும் வேலை நிறுத்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளித்திருக்கக் கூடும்.

வேலைநிறுத்தம் ஆரம்பமானபோது, அதுபற்றி இதே பத்தியில் நாம் குறிப்பிடுகையில், தொழிலாளரையும், அவர்களது போராட்டங்களையும் சிலர் அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடுமென்றும் இதற்கு தொழிலாளர் இடமளிக்கக் கூடாதென்றும் எச்சரித்திருந்தோம். தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்துக்கு வேறு பல (அரசியல் கலப்புள்ள) தொழிற் சங்கங்களும் ஆதரவு தெரிவித்தன; சில வேறு கோரிக்கைகள் மீது வேலை நிறுத்தங்களையும் ஆரம்பித்தன. இதன் பயன் தோட்டத் தொழிலாளரின் நியாயமான போராட்டத்துக்கும் 'அரசியல் முத்திரை' குத்தப்பட்டது. அதன் விளைவு வேலைநிறுத்தம் நீடித்தது. அன்ருட உழைப்பை நம்பியிருக்கும் தோட்டத் தொழிலாளர் பட்டினி கிடக்க நேர்ந்தது. எத்தனை நாளைக்குப் பட்டினி கிடப்பது? வேலைநிறுத்தம் பிசுபிசுத்தது. யார் மீதோ பழியைப்போட்டு வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதென முடிவு செய்யப்பட்டது. இப்பொழுது தொழிற் சங்கங்கள் சில ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்துகிருர்கள்.

தொழிலாளரின் கோரிக்கை நியாயமானதாக இருப்பினும் அவற்றைப் பெறுவதற்கு பல வழி முறைகள் உள்ளன. இனியாவது தொழிலாளரும் தொழிற் சங்கங்களும் விவேகத்துடன் செயலாற்றவேண்டும்.

## கொடித்தினம்

காது கேளாத, கண் பார்வை தெரியாத நம்மில் ஒரு பிரிவினருக்கு வாழ்வளிப்பதற்கு நாமும் நமது பங்கைச் செலுத்தும் வாய்ப்பு இன்று கிடைக்கிறது. குருடர் செவிடர்களுக்கான தேசிய சபையின் கொடித்தினம் இன்று இலங்கை முழுவதிலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

வருடத்தில் ஒரு நாள் கொடிகளை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு இத்தேசிய சபை பெரும் பணிபுரிகிறது. இச்சபையின் சேவையை நாடு அறியும். கவனர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவும், பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் இக்கொடித்தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில், தாராள சிந்தையுடன் பணம் கொடுத்து கொடிகளை வாங்கிச் சமூகத்தால் ஒதுக்கப்பட்டுள்ள ஒரு பிரிவு மக்களுக்கு வாழ்வளிக்க உதவுமாறு கேட்டுள்ளனர்.

காதுகேளாத, கண் பார்வை தெரியாதவர்களும் நமது சகோதரர்களே. அவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிபுரிய வேண்டியது அனைவரினதும் கடமையாகும். வருடத்தில் ஒரு நாள்தான் உதவிசெய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறக்கூடாது.

இதே சமயம், குருடர், செவிடர் பாடசாலைகளில் படித்து அறிவுபெற்ற பலர் அங்கஹீனர்களாக இருக்கும் காரணத்தால் வேலைவாய்ப்பின்றியிருக்கின்றனர். அவர்களின் இயல்புக்கேற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பளித்து அவர்களை ஆதரிக்க அரசாங்கமும், தொழிலதிபர்களும் முன்வரவேண்டும்.

## புதிய அதிபர்

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு [illegible] மகளிர் கல்லூரிக்கு புதிய அதிபராக திருமதி [illegible] [illegible] தொடர்ந்தும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# குறிகாட்டுவான் துறைமுகம் இன்று திறப்பு விழா

நெடுந்தீவு மக்களுக்கு பல கஷ்டங்கள் உண்டு. இவற்றுள் பிரயாண வசதிதான் மிகமுக்கியத்தும் வாய்ந்தது. இத்தீவகத்திற்கு வரும் ஒவ்வொரு பிரயாணியும் இதனை தம் அனுபவ மூலமாகக்கண்டு உணர்ந்திருப்பீர்கள்.

''மற்றைய தீவுகளை பிணைத்த பாலம் போன்று நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்குமிடையே அண்மையில் ஒரு துறைமுகம் அமைத்துத்தருமாறும், நெடுந்தீவு அலைகடலுக்கு உகந்ததாக ஓர் புதிய மோட்டார் படகை இத்தீவு மக்களுக்கு அளிக்க உதவிசெய்யவேண்டும் எனவும் இன்னல்படும் எம்தீவு மக்கள் சார்பாக கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு சேர் ஜோன் கொத்தலாவலைக்கு அளித்த வரவேற்பின்போது கிராம சபை தலைவர் திரு. சு. நாகேந்திரம் குறிப்பிட்டார். இவரது இரு கனவுகளும் இன்று நனவாகிவிட்டது.

இத்துறைமுகத்திற்கு வித்திட்டவர் முன்னுள் எம். பி. திரு. அல்பிறட் தம்பிஐயா, பின்பு இத்திட்டத்தை பாராளுமன்றத்திலும்வெளியிலும் ஊக்குவித்து இப்பாலம் கெதியில் உருவாக அரும்பாடுபட்டவர் மறைந்த தியாகி திரு. வீ. ஏ. கந்தையா தற்போதைய தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம், முந்திய அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீரா, பொது மராமத்து மேற்பார்வையாளர் திரு. எஸ் நடேசன் என்போர் இத்திட்டம் பூர்த்தியாக மிக பிரயாசப்பட்டவர் நெடுந்தீவு பொருளாதாரச் சங்கத்தின் நோக்கம் ஒன்று இன்று நிறைவேறுகிறது.

### பிரயாண வசதி

முன்பு நெடுந்தீவு மக்கள் ஊர்காவற்றுறை பாலத்திலிருந்து 17 மைலை மூன்று மணித்தியாலத்தில் பிரயாணம்செய்தார்கள். இன்று இவர்கள் குறிகாட்டுவான் பாலத்திலிருந்து அரைமணி நேரத்தில் நெடுந்தீவை அடையமுடியும். ஓரளவில் இப்பாலம் நெடுந்தீவு மக்களின் பிரயாண வசதியை தீர்க்கும் முதல்படியாகவும் தீவுப்பகுதிகளை ஒன்றித்து இணைக்கும் சங்கிலியாகவும் திகழுகிறது.

### புதிய மோட்டார்ப் படகு

நெடுந்தீவு மக்களின் பிரயாண கஷ்டங்களை நீக்க புதிய மோட்டார்ப் படகு ஒன்றை தந்துதவதேசியஅரசாங்கம் சம்மதித்து அதற்கான வேலை ஒப்பந்தம்செய்யப்பட்டுள்ளது. இப்படகு இவ்வருட முடிவுக்குள் சேவைக்கு வந்ததும் நெடுந்தீவு மக்களும், பிறரும் நெடுந்தீவை ஒரு மணித்தியாலத்தில் தரிசித்து திரும்பும் வசதிகள் ஏற்படும்.

# தமிழரின் வரலாற்று காவியமே சிலப்பதிகாரம்

## சென்னை நகர மேயர் பேச்சு

கொழும்பு, வெள்ளி

''சிலப்பதிகாரம் காட்டும் செழுமையான தமிழ் நாட்டை ஆக்கும் பணிக்காகவே நாம் அரசியலில் புகுந்திருக்கின்ருேம். ஆனுல் இலங்கை மக்கள் சிலப்பதிகாரம் கூறும் நற்பண்புகளை மேற்கொண்டு வாழவேண்டும்'' என்று விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றகூட்டத்தில் ''சிலம்புச் செல்வம்'' என்னும் தலைப்பில் பேசுகையில் சென்னை மாநகர மேயர் திரு. மைனர் மோசஸ் குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் திரு. மு. வயிரவப்பிள்ளை தலைமை வகித்துப்பேசுகையில், விவேகானந்தசபை தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும்பணி ஆற்றிவருவதுபற்றிக் குறிப்பிட்டார்.

திரு. மோசஸ்தொடர்ந்து பேசுகையில், ''சைவத்திற்குத் தொண்டு செய்வதென்ருல் அது தமிழுக்குச் செய்யும் பணிதான் உண்மையில் தமிழை வளர்க்கும் போதுதான் சைவமும் வளரும். மதங்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி தமிழையே வளர்த்தது. வைணவர்கள் கம்பராமாயணத்தைப் போற்றிய காலத்தில் சைவர்கள் திருவிளையாடற் புராணத்தைப் போட்டியாகப் படைத்தார்கள். மத இலக்கியங்கள் என்று புறக்கணிக்காமல் அவ்விலக்கியங்களில் உள்ள இனியதமிழைப் பேணவேண்டும். படித்து இன்புறவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தனித்தமிழை பாமரரும் படித்துப் போற்றும்படி மேன்மை நிலையை ஏற்படுத்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தையே சாரும்.

தமிழரின் வரலாற்றுக் காவியமே சிலப்பதிகாரம். கற்பின் பெருமையைக் கண்ணகி வாயிலாக அங்கு காண முடியும். கற்புடைய மகளிர்க்கு இலக்கணமமைத்துக்கொடுத்து இலக்கணம் படைத்தான் இளங்கோ.

பூரணமான தமிழகத்தைச் சித்தரிக்கும் காவியமே சிலப்பதிகாரம். சேர சோழ பாண்டிய நாடுகளையும் ஒருங்கே காணமுடிகிறது. தமிழ்நாடு சிறந்துவிளங்கிய காட்சியைச் சிலப்பதிகாரத்திலே நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

## ஜீவ சக்தி அளிக்கும் புதிய மாத்திரை

பர்மிங்காம், ஜூலை 29

எட்டுப்பலஹீனமான மனிதர் எப்படிஒரு புதிய போக ஜீவசக்தியளிக்கும் மாத்திரையை மூன்று மாதம் தொடர்ந்து உட்கொண்டதால், பலவான்களாக மாறினர் என்பதை டாக்டர் ஒருவர் இங்கு விவரித்தார். போக ஜீவசக்தியில்லாதிருந்த ஒரு 25 வயது இளைஞன் இம்மாத்திரையை உட்கொண்டதன் பயனுக இப்பொழுது ஒரு தகப்பனுராகியிருக்கிருரென்றும் அவர் தெரிவித்தார். (பி.டி.ஸி.)

## நாட்டிலும் நகரிலும்

'மந்திரத்தால் மாங்காய் விழுமா?' என்பது முதுமொழி. மாங்காய் விழமாட்டாது என்பதுதான் அதன் கருத்து. 'மந்திரம்கால் மதி முக்கால்' என்பது இன்னெரு பழமொழி.

மனிதன் தன்னுடைய மதியை உபயோகித்தால் தான் இவ்வுலகில் சித்தி பெறலாம். அன்றி மந்திர தந்திரங்களை நம்பியிருப்பவன் அதோ கதிதான். மந்திரம் சொல்லித் தந்திரம் செய்யும் எத்தர்கள் உலகில் எந்தக் காலத்திலும் இருந்திருக்கிருர்கள். வாழ்க்கையிலுள்ள துன்பங்களைத் தாங்கிச் சகிக்க முடியாதவர்கள் இவர்களுக்கு இலகுவில் இரையாகிவிடுகிருர்கள்.

'மந்திரத்தால் மழையை வரவழைப்பேன்' என்று சென்னையிலுள்ள ஒரு மந்திரவாதி வீரராகவஐயர் என்பவர் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸனுக்கும் இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜருக்கும் கடிதம் எழுதியுள்ளாராம். நல்லவேளையாக, அதாவது அந்த மந்திரவாதிக்கு நல்லவேளையாக அவருக்குப் பதில் வரவில்லை. 'சரி செய்து காட்டும்' என்று யாராவது கூறியிருந்தால் பம்பாயில் தண்ணீர் மீது நடக்கப்போய் தடால் என்று 'தடம் புரண்ட—சுஷ்டயோகியின் கதிதான் இவருக்கும் கிடைத்திருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

மந்திரம் செய்துமழையை வருவிக்கலாம் என்ற நம்பிக்கையுள்ள இந்தச் சித்தர் மழையில்லாமல் பயிரில்லாமல் உணவில்லாமல் சாகும் தமது சொந்த நாட்டவரின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு ஏன் முன்வரவில்லை. தலைவர் காமராஜரின் கட்டளையை எதிர்பார்த்திருந்தாரோ?

யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டிலே ஒருவர் ரேகை சாஸ்திரம் பார்த்துக் குறி சொல்லுகிருர். அவரைச் சுற்றி எந்த நேரமும் சுமார் பத்து பேராவது நிற்கிருர்கள். நல்ல பணம்படைத்தவர்களும் நிற்கிருர்கள். ஒரு நேரச் சோற்றுக்கே வழியில்லாத ஒட்டாண்டிகளும் நிற்கிருர்கள். பணம் உள்ளவர்களுக்கு இன்னும் கூடுதலாகப் பணம் தேடவேண்டுமென்ற ஆசை. பணம்இல்லாதவர்களுக்கு எப்பொழுது பணம் கிடைக்கும் என்பதைக் கேட்பதற்கு ஆசை. நிலைமைகள் வேறு; ஆனுல் விசாரம் ஒன்று.

ரேகை பார்ப்பவர் ஒவ்வொருவருடைய கையையும் பிடித்துப் பார்த்து குறி கூறுவார். ஆனுல் ஒருவருக்காவது 'உனக்கு கஷ்ட காலம்' என்று கூறமாட்டார். 'நீ ஆளப்பிறந்தவன், ராஜாவாய் இருக்க வேண்டியவன், தெரியாத்தனமாய் இப்படி வந்துவிட்டாய். இன்னும் இரண்டு மாதங்களுக்குத்தான் உனக்கு இடைஞ்சல், அதற்குப் பின் உன்னை அசைக்க முடியாது' என்று கூறுவார். சாஸ்திரம் கேட்பவருக்கு பரமதிருப்தியாய் விடுகிறது. 25சதத்துக்குப் பதில் சாப்பாட்டுக்குவைத்திருந்த 50 சதத்தையே தூக்கிக் கொடுத்துவிடுவார்.

'சென்றுபோனது கஷ்டகாலம், இனிமேலாவது நல்லகாலம் பிறக்கும்' ஒருவித நப்பாசை எல்லா மனிதர்களிடத்தும் இருக்கிறது. இந்த மூல தத்துவத்தை மந்திரவாதிகளும் சோதிடர்களும் நன்ருகப் பயன்படுத்தி தங்கள் பிழைப்புக்காக பயன்படுத்துகிருர்கள்.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மந்திரத்தால் மழையை வருவிக்கப்போகிறவரும் இந்த வகையருத்தான்.

'மனிதன் ஏதேதோ சாதனைகளைஎல்லாம்செய்கிருன். ஆனுல் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ள அவனுக்கு மார்க்கம்புரியவில்லை' என்று ஸ்ரீ முருகதாஸ் அன்று கூறினுர். மனுத தத்துவத்துக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிறதென்ற உண்மையை அறிந்துகொண்டால் சோதிடமேது, மந்திரமேது?

வழிப்போக்கன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "நாடகம் ஒரு தனிக்கலை; சினிமாவை பின்பற்றக்கூடாது"

## திறப்பு விழாவில் அரசாங்க அதிபர்

சுழிபுரம், வெள்ளி

"ஒரு நாட்டின் பண்பாடு அந்த நாட்டின் கலை, கலாச்சாரம் ஆகியவற்றால் மதிப்பிடப்படுகின்றன. எமது நாடு கலைத்துறையில் குறிப்பாக நாடகக்கலையில் அதிகம் வளர்ச்சியடையவில்லை. இந்நிலையைப் போக்க நாம் உலக நாட்டுக் கலைஞர்களின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் முன்னேறலாம்" யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மானிப்பாய் புதியநகர மண்டப அரங்கை திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் ஆகியஇருவரும் நகரமண்டப அரங்குக்குஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

திரு. வேர்ணன் அபயசேகரா குத்துவிளக்கேற்றி புதிய அரங்கைத் திறந்து வைத்தார். கட்டிடசபைத் தலைவர் திரு. எம். முத்துக்குமாரசாமி விழாவுக்குத் தலைமைவகித்து அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. வேர்ணன் அபயசேகரா தொடர்ந்து பேசுகையில், நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில்நாடகத்துறையில் அதிகம் ஈடுபாடுடையவனாக இருந்துள்ளேன். நாடக வளர்ச்சிக்கு வேண்டிய அண்ணாவிமார், நடிகர்கள் மிகவும் குறைவாகவும் அதேபோல் ஊக்கம் கொடுப்போர் குறைவாகவும் உள்ளனர். எமது நாடக வளர்ச்சிக்கு பிற நாட்டுக் கலைஞர்களின் தொடர்பு மிகவும் அவசியமாகும். பிறநாடுகள் அடைந்திருக்கும் மேம்பாடுகளைக் கவனிக்க வேண்டும். வேண்டிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாடகம் தனிக் கலையாகும். அதில் சினிமாப் பாணியைக்கலக்கக்கூடாது.

தென்னிந்திய திரையுலகை ஒருபொழுதும் பின்பற்றக்கூடாது. தென்னிந்திய திரையுலகினர் எவ்வித முன்னேற்றமும் இன்றிப் பணம் பெறும் நோக்கையே கொண்டு காரியத்தைச் செய்து வருகின்றனர். கலையென்ற பாலைவனத்திலே ஏற்பட்ட ஒரு கலைப்பூங்காவாக இவ்வரங்கு விளங்க வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். சமூகஜோதி இராசவாசல் சி. தியாகராசா, மானிப்பாய் பட்டின சபைத்தலைவர் திரு. சி. இராசேந்திரம், திரு. ஹண்டி பேரின்பநாயகம், உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ் சி. மாணிக்கவாசகர், கலையரசு க. சொர்ணலிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

# மூன்று கார் சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 2948 பெறும் 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 | S | 0451 | 78 | U | 0460 |
| 27 | T | 0330 | 06 | P | 0374 |
| 48 | T | 0318 | 63 | F | 0930 |
| 21 | V | 0107 | 80 | U | 0046 |
| 74 | B | 0871 | 06 | K | 0449 |
| 72 | Z | 0011 | 37 | O | 0303 |
| 63 | I | 0207 | 29 | B | 0424 |
| 04 | N | 0087 | 55 | K | 0484 |
| 62 | K | 0861 | 46 | S | 0787 |
| 17 | W | 0570 | 43 | E | 0014 |
| 60 | T | 0432 | 88 | K | 0876 |
| 67 | A | 0816 | 88 | P | 0910 |
| 16 | Q | 0558 | 63 | K | 0595 |
| 85 | T | 0272 | 11 | G | 0620 |
| 50 | A | 0540 | 11 | H | 0574 |
| 42 | D | 0082 | 47 | E | 0467 |
| 11 | U | 0422 | 69 | N | 0192 |
| 79 | O | 0939 | 83 | B | 0704 |
| 58 | D | 0517 | 57 | V | 0019 |
| 61 | J | 0418 | 07 | F | 0898 |
| 23 | X | 0825 | 08 | U | 0609 |
| 33 | S | 0315 | 72 | B | 0786 |
| 34 | E | 0846 | 36 | W | 0079 |
| 72 | Z | 0305 | 85 | J | 0028 |
| 14 | S | 0618 | 81 | F | 0425 |
| 48 | K | 0269 | 36 | R | 0375 |
| 41 | Y | 0587 | 14 | B | 0060 |
| 66 | S | 0808 | 15 | J | 0266 |
| 06 | J | 0097 | 51 | P | 0820 |
| 89 | M | 0538 | 52 | O | 0004 |
| 69 | S | 0852 | 10 | P | 0982 |
| 61 | G | 0571 | 27 | W | 0083 |
| 85 | Y | 0121 | 40 | S | 0852 |
| 68 | E | 0155 | 69 | J | 0178 |
| 40 | V | 0228 | 10 | K | 0676 |
| 50 | V | 0068 | 16 | T | 0450 |
| 50 | S | 0594 | 32 | S | 0091 |
| 48 | F | 0520 | 16 | Q | 0953 |
| 17 | G | 0806 | 78 | G | 0728 |
| 83 | F | 0613 | 77 | N | 0137 |
| 68 | P | 0475 | 03 | V | 0247 |
| 88 | O | 0944 | 14 | H | 0923 |
| 09 | F | 0596 | 89 | Q | 0946 |
| 14 | L | 0838 | 18 | P | 0160 |
| 04 | S | 0624 | 90 | T | 0504 |
| 89 | G | 0918 | 67 | R | 0042 |
| 46 | S | 0395 | 46 | J | 0659 |
| 36 | B | 0554 | 23 | G | 0448 |
| 70 | H | 0477 | 51 | Z | 0705 |
| 52 | H | 0958 | 65 | Y | 0011 |

# வரிவிதிப்புமுறையை ஆராய ஒரு கமிஷன்

கொழும்பு, வெள்ளி

வரிவிதிப்புமுறையை ஆராயும் நோக்கத்துடனும் சுதந்த சிபார்சுகள் எந்தஅடிப்படையில் செயல்பட வேண்டுமென்பதை பரிசிலனை செய்யவும் அரசாங்கம் ஒரு கமிஷனை நியமிப்பதென முடிவுசெய்துள்ளது.

இந்த கமிஷனில் அங்கம் வகிப்பதற்காக இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து நிபுணர்களை அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னாள் மத்திய வங்கியின் ஆளுனராக கடமையாற்றிய சேர் ஆர்தர் ரணசிங்கா அநேகமாக இக்கமிஷனுக்கு தலைவராகநியமிக்கப்படலாமென நம்பப்படுகிறது.

முன்னாள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டபல விதமான வரி வகைகள் நடைமுறைக்கு ஒவ்வாததாகவும்நாளடைவில்செயல்படுத்த முடியாத நிர்வாக சிக்கல்களை ஏற்படுத்தியமையினாலுமே இப் புதிய வரி முறைகளை ஆராய ஒரு கமிஷன் நியமிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வரிகளைச் சுலபமாகவும் இலகுவாகவும் வசூலிக்கக் கூடியமுறையில் அரசாங்கம் புதிய வரிமுறைத் திட்டத்தை உருவாக்க தீர்மானித்துள்ளது. இதன்காரணமாகவே இக்கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. இப்புதிய முறைவருமானவரி இலாகா பகுதி வேலைப்பழுவைகுறைக்கவும் வரியைசிறந்தமுறையில் வசூலிக்கவும் வகை செய்யும் என நம்பப்படுகிறது.

# இராமநாதன் பல்கலைக்கழகம் அடையாளமான்யம்விடுபட்டதேன்

## பிரதமரிடம் ஜி. ஜி. ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்திற்கு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் அடையாளமான்யம் ஒதுக்கப்படாததையிட்டு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதமருக்கும், கல்வி மந்திரிக்கும், கல்வி இலாகாவின் உயர்தர அதிகாரிகளுக்கும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தில், இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட அடையாள மான்யமான 10 ரூபா, இம்முறை நீக்கப்பட்டிருப்பதை திரு. பொன்னம்பலம் சுட்டிக் காட்டினார்.

தற்செயலாக இத் தவறு நடந்து விட்டதாக, பிரதமரும், கல்வி மந்திரியும் தெரிவித்தனர்.

வரவு செலவுத் திட்டம் ஷரத்து வாரியாக கமிட்டி நிலையில் ஆராயப்படும் போது இராமநாதன் இந்துப்பல்கலைக் கழகத்திற்கு அடையாள மான்யம் ஒதுக்கப்படும் என்று திரு. பொன்னம்பலத்திடம், பிரதமரும் கல்வி மந்திரியும் தெரிவித்தனர்.

# கதிர்காமத் தீ விபத்து நாசவேலையா?

## இரகசிய பொலிஸ் அதிகாரி விசாரணை

கொழும்பு, வெள்ளி

கதிர்காம புனிதஸ்தலத்தில் இரண்டாவது முறையாக ஏற்பட்ட தீவிபத்து, வேண்டுமென்றே ஆரம்பிக்கப்பட்டதா என்பதை ஆராய்வதற்காக இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று அங்கு சென்றார்.

அங்கு ஏற்பட்ட முதலாவது தீவிபத்து, தற்செயலாக ஏற்பட்டதென்பது தற்பொழுது தெளிவாக்கப் பட்டுவிட்டது.

முதலாவது தீவிபத்து வேண்டுமென்று செய்யப்பட்டதல்லவெனப் பொலிசார் கருதியபோதிலும், முதலாவது தீவிபத்து ஏற்பட்டபோது அங்கிருந்து பறந்த தீப்பொறிமூலமே இரண்டாவது தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம்மென நம்புகின்றனர்.

விசாரணைபதிவு ஏடுகளும், வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களும் உள்ள நீதிமன்றம் உட்பட சகல சட்டத்துறை உத்தியோகத்தர்களின் காரியாலயங்களும் தீப்பற்றிக் கொண்டதாலேயே 2-வது தீவிபத்தில் பொலிசாருக்கு சந்தேகம் தோன்றியுள்ளது.

## டாக்டர் மறைவுக்கு அனுதாபம்

மாவிட்டபுரம், வெள்ளி

பழை சனசமூகநிலைய வருடாந்தக் கூட்டத்தில் டாக்டர் கே. ஸி. சண்முகரெத்தினம் மறைவு குறித்து இரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்னாரின் சேவையைப் பாராட்டி பலர் பேசினர். இக்கூட்டம் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

## சொற்பொழிவு

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மாணவர்மன்ற ஆதரவில் ஒரு சொற்பொழிவு நடைபெற்றது. சொற்பொழிவுக்குதிரு. கே. சிசுவலிங்கம் தலைமைவகித்தார். பண்டிதர் வ. நவரத்தினம் 'சிவனை ஏவல் கொண்ட செம்மல்கள்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவுசெய்தார்.

## பாகிஸ்தானுக்கு மீண்டும் அமெரிக்க ஆயுதம்?

வாஷிங்டன், ஜுலை 29

மீண்டும் பாகிஸ்தானுக்கு ராணுவ ஆயுதங்களை அமெரிக்கா அனுப்பலாமென்ற செய்தியை இங்கு வெள்ளை மாளிகை உத்தியோகத்தர்கள் மறுத்துள்ளனர். அச்செய்தியில் உண்மையில்லை என்றும் அத்திபாரமற்றது என்றும் அச் செய்தியை அவர்கள் விவரித்தனர்.

(பி. டி. ஐ.)

## சீனாவை ஜப்பான் கண்டித்தது

ஜப்பான், ஜுலை 29

உலக அபிப்பிராயத்துக்கு எதிராக அணுகுண்டு பரிசோதனைகளை நடாத்தியதற்காக கம்யூனிஸ்ட் சீனாவையும், பிரான்சையும் ஜப்பானிய பிரதமர் திரு. எசக்கோ சற்றோ இங்கு கண்டித்தார். சீனாவின் அணுசக்தி ஆசியா[illegible] தானத்துக்கு [illegible] விளங்குகிறது எனவும் அவர் கூறினார்.

(பி. டி. ஐ.)

## குருபூஜை

கொழும்பு, வெள்ளி

வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத்தின் ஆதரவில் சிறீவரதராஜ விநாயகர் ஆலயத்தில் மேற்படி சங்க உபதலைவர் திரு. ஆ. க. சுப்பிரமணியம் தலைமையில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை கொண்டாடப் பட்டது.

திரு. அ. கனகரத்தினம் கூட்டுவழிபாடு நடாத்தினார். திருவாளர்கள் சு. ஜெயராமச்சந்திரன், மா. நடேசு, ஆகியோரினதும் செல்விகள் க. தியாகேஸ்வரி, சி. இசைவாணி, வை. சிவபாக்கியம் ஆகியோரினதும் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

## பெற்றார் தினவிழா

யாழ்ப்பாணம், சனி

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்பாடசாலைபெற்றார் தினவிழா இன்று மாலை இளைப்பாறிய ஆசிரியர் திரு டி. ரி. சாமுவேல் தலைமையில் நடைபெறும்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். பழைய மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கூட்டத்திற்கு கோரமில்லை

சங்கானை' வெள்ளி

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கப் பொதுக்கூட்டம் சங்கநிலையத்தில் ஆரம்பமான போது இரு கூட்டுறவு அதிகாரிகள் பிரசன்னமாய் இருந்தனர். கூட்டம் தொடங்கிச் சிறிது நேரத்தில் [illegible] இல்லை[illegible] கூட்டம் [illegible] திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பனைக்கு அருகில் கார் விபத்து: ஐவருக்கு காயம்

கிளிநொச்சி, வெள்ளி

சுன்னாகத்திலிருந்து கதிர்காமத்துக்குச்சென்ற ஒரு கார் பனைக்கு அருகாமையில் பனைமரம் ஒன்றுடன் மோதுண்டதன்விளைவாக விபத்தில் சிக்கி ஐவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சாரதி திரு. ஆர். குணரத்தினம், திரு. எஸ். கந்தசாமி மற்றும் இரு பெண்களுக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பளைப் பொலிசாரால் தொடர்ந்து புலன் விசாரணை நடைபெறுகின்றது.

## உடுப்பிட்டியில் கூட்டுறவு விழா

வல்வெட்டித்துறை வெள்ளி

சர்வதேச கூட்டுறவுதின விழா உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலை மண்டபத்தில் இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு சு. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கூட்டுறவுக் காரியாலய பரிசோதகர் திரு. ரி. சண்முகராசா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் கூட்டுறவு இயக்கக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

## அமெரிக்காவில் இஸ்ரேல் ஜனாதிபதி

நியூயோர்க், ஜுலை 29

இஸ்ரேல் ஜனாதிபதி சால்மன் சஷார் அமெரிக்காவுக்கு நேற்று வந்து சேர்ந்தார். அவர் இங்கு ஒரு வாரம் தங்கியிருப்பார். அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனையும் அவர் சந்திப்பார்.

(பி. டி. ஸி.)

## பட்டதாரிகளின் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த நான்கு வருடங்களாக வேலையற்றிருக்கும் சுமார் 300 இலங்கைப்பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதுபற்றி, அரசாங்கம் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காததையிட்டு, பட்டதாரிகள் மிகுந்த ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

இப்பிரச்னையையிட்டு வேலையற்ற இலங்கைக் கலைப்பட்டதாரிகள் சங்கம், பிரதமரையும், கல்விமந்திரியையும் பேட்டிகாணுவதெனத் தீர்மானித்துள்ளனர்.

மேலும் சங்க நடவடிக்கைகளைத் தீவிரமாக்கவும், பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வுகாண்பதுபற்றி ஆலோசிக்கவும், கலைப்பட்டதாரிகளின் முக்கிய பொதுக்கூட்டம் இன்று ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## திருடியவருக்கு சிறைத்தண்டனை

மாகோ, வெள்ளி

20ரூபா திருடியதாக ஜே. ஏ. ஜெயக்கொடி என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், மகோ மாஜிஸ்டிரேட் ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

"ஏடே எங்கப்பா சரியான கும்பகர்ணனாகத்தான் இருப்பீர்கள் போலிருக்கே?" என நித்திரைவிட்டு எழுந்த ராமுவைப் பார்த்து அந்தச் சிறுமி பரிகாசமாகக் கேட்டாள்.

"ஆமா... நீ யார் பாப்பா?" என் இராமு கேட்டான்.

"நான் பாப்பா இல்லை... நான் தான் மிஸ் சந்திரா" என்றாள். சிறிது நேரத்தில் ராமு காலைக்கடனை முடித்துவிட்டு போசன அறைக்குள் நுழைந்தான். இராமுவின் வருகைக்காக மோகன் காத்துக்கொண்டிருப்பதைக்கண்ட இராமு "மன்னிக்கவேண்டும் டாக்டர், உங்களுக்கு சிரமம் தந்ததுடன், காக்கவும் வைத்துவிட்டேனே!" என்று மன்னிப்புக் கோரும் பாணியில் கூறினான். "பரவாயில்லை மிஸ்டர் இராமு; அமருங்கள்..." என்றுவிட்டு... "மறந்துவிட்டேன் அவள்தான் எனது மூத்த தங்கை மாலா", என இராமு அமர்ந்திருந்த ஆசனத்துக்கு எதிரில் இருந்த பெண்ணைச் சுட்டிக்காட்டிக் கூறினார் டாக்டர்.

"வணக்கம்", என இராமு அவளைப் பார்த்துக் கூறவே மாலாவும் பதிலுக்கு "வணக்கம்", எனக் கூறினாள். அவள் குரல் உடைந்து கரகரத்தது. முகத்தில் ஒருவித அச்ச உணர்வு மேலோங்கி நிற்பதையும் இராமு கவனித்துக்கொண்டான்.

"உங்களுக்கு அருகில் இருப்பவள்தான் எனது இளைய தங்கை சந்திரா... அவள் அதற்குள் உங்களைப் பழக்கம் பிடித்துவிட்டாளே! நேற்று இரவு நன்றாகத் தூங்கினீர்களா?" என்று கேட்டார் டாக்டர்.


"நன்றாகத் தூங்கினேன். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் எழுந்தேன் என்றான் இராமு.

"இதோபாரும் மிஸ்டர் இராமு. யாரோ ஜம்புவாம்... அவன் என்னுடன் வம்புபண்ணத் தொடங்கியிருக்கின்றான்" எனக் கூறிக்கொண்டே ஒரு சிறிய எச்சரிக்கை முடங்கலை டாக்டர், இராமுவிடம் கொடுத்தார்.

"உங்களுக்கு யாரோ வேண்டாதவர்கள் இருக்கின்றார்கள் போல இருக்கு டாக்டர்" எனக் கூறிவிட்டு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, அவன் தனது அறையை நோக்கி நடையைக்கட்டினான்.

செல்லையா மதிய நேரமாக வந்து; இரவு முழுவதும் ஓயாமல் அடித்த மழையின் காரணமாக சோலைவனத்துக்கும் சிவபுரத்துக்கும் இடையிலுள்ள கட்டாறு பெருகியதால் போக்குவரத்து வசதிகள் சில நாட்களுக்கு சீராக இருக்காது எனக் கூறிவிட்டுச் சென்றான். அதன்பின்பு இராமு தனது தினசரிக் குறிப்பில் இரவு நடந்த விஷயங்களைப் பதியத் தொடங்கினான்.

இதற்கிடையே டாக்டர் மோகன், தனது ஆராச்சி அறையை மதியபோசனத்துக்குப் பின்பு வந்து சுற்றிப்பார்க்குமாறு இராமுவுக்கு ஓர் அழைப்பு விடுத்திருந்தார். இராமுவும் ஆவலுடன் எதிர்பார்த்தவாறே இருந்தான். அவனது எதிர்ப்பில் ஏதோ பரபரப்பு அடங்கியிருந்தது. திடீரென மேல் மாடியில் உள்ள ஓர் அறையிலிருந்து பலத்த ஓசை வெளிவந்தது. உடன் இராமு தன் அறையிலிருந்து வெளியே




வந்து அங்கு எழுந்த ஓசையைச்செவிமடுக்கத்தொடங்கினான்!

"முடியாது! முடியாது... முடியவே முடியாது!" என ஒரு பெண்குரல் தீர்மானமான குரலில் கூறிற்று. அதனைத் தொடர்ந்து பயங்கரமான ஆண்குரல்...

(தொடரும்)

## அல்பேர்ட் ஐயன்ஸ்டீன்

— சபா புஷ்பராதன் —

தற்காலத்தில் சிறந்த விஞ்ஞானிகளின் வரிசையிலே முன்னிற்கும் சிலரில் டாக்டர் அல்பேர்ட் ஐயன்ஸ்டீனும் ஒருவர் இவர் 1879- ஆண்டுஜேர்மனியிலே உல்ம் அல்ம் நகரில் பிறந்தார். இளம் பிராயத்திலே கணிதத்தில் அசாதாரணத் திறமை காட்டிய அவர் யூதர் இனத்தைச் சேர்ந்தவர். அவர் சித்தாந்த விஞ்ஞானத்திலேதான் (Theoretical Physics) விசேஷ அக்கறை செலுத்தினார் சுவிட்சலாந்தின் சுதந்திரச் சூழ்நிலை ஐயன்ஸ்டீனுக்கு மிகவும் பிடித்து விட்டது.

1905-ம் ஆண்டில் பலருக்கு வியப்பூட்டும் வகையில் அவர் பல அசாதாரண கொள்கைகளை வெளியிட்டார் அவை எல்லாம் முடிவான சித்தாந்தங்களாக அப்போது ஆகவில்லை அவைகளில் அவருக்கு மிகப் புகழைக் கொடுத்தது விசேஷ ஒப்புவமைத் தத்துவம் (Special Relativity) ஆகும்.

பல வருட ஆராய்ச்சிகளின் பின் 1916-ம் ஆண்டு அவர் தமது பொது ஒப்புவமைத்தத்துவத்தை (General Relativity) வெளியிட முடிந்தது. 1921 முதல் 1933 வரை ஐயன்ஸ்டீன் உலகத்தைசுற்றி பிரயாணம்செய்தார். நோபல் பரிசு பெற்ற ஐயன்ஸ்டீன், கோப்பி பதக்

(7-ம் பக்கம் பார்க்க)


பாரங் குறைந்த

தனியொரு

லயனைட் தகட்டில்

ஏழு பலசாலிகள் ஏறி நின்றும்

அது அசையவில்லை!



6 அடி நீளம் 43" அகலம் 46 இருத்தல் நிறையுள்ள தனியொரு லயனைட் தகட்டில் 806 இருத்தல் நிறையுள்ள 7 பேர் ஏறி நிற்கையில் எடுத்த புகைப்படம். (பாரங் குறைந்த) லயனைட் தகடு 1000 இருத்தலுக்கும் அதிக பாரத்தைத் தாங்கக் கூடியதென்று வேறு பரிசோதனைகளும் நிரூபித்திருக்கின்றன.

தரத்திற் சிறந்த அஸ்பெஸ்டாஸ் கல்நார் மூலப் பொருளை வைத்துத் தொடர்பாக நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக, உறுதிக்கும் உழைப்பு வன்மைக்கும் மிருதுத் தன்மைக்கும் இதற்கு நிகர் இல்லை என்னும்படியான அதி சிறந்த அஸ்பெஸ்டாஸ் தகடு உருவாகியிருக்கிறது. கூரை வேயப் பயன்படும் எப்பொருளையும் விடக் குறைந்த செலவுள்ள இது, வேய்ச்சல் செலவில் 20% மிச்சப்படுத்துகிறது.




அத்துடன் உங்கள் நாட்டுக்கு அந்நிய செலாவணியையும் மிச்சப்படுத்துகிறது!

மார்க்கெட்டில் இன்று கிடைக்கும் அதி சிக்கன, அதி நீண்ட் உழைப்பு வன்மையுள்ள பாரங் குறைந்த லயனைட்டை வற்புறுத்தி வாங்குங்கள்.

இந்த மற்றொரு மதிப்பு வாய்ந்த பொருளைத் தயாரிப்போர்:

ஸ்ரீ லங்கா அஸ்பெஸ்டாஸ் புரடக்ஸ் லிமிட்டெட்,

61, ஸெட்டவன வீதி, கொழும்பு-14.


நமது வைத்தியம்

## பற்களைப் பாதுகாப்பது எப்படி?

### உணவுதான் முக்கிய காரணம்

— ஹான்ஸ் றுக்கர் —

சமீபத்தில் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் செய்தி ஸ்தாபனங்கள் மூலம் வெளியான சிறிய செய்தி விளக்கம், மக்களை பல்சூத்தை பிடிப்பதிலிருந்து காப்பாற்றுவதற்காக குடிநீர் அனைத்தும் பெரிய நகரங்களில் மருந்திட்டுச் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றனவாக வெளியாகின. குடிநீரை பிளோரீன் (Flourine) மூலம் சுத்திகரிக்கப்படுகின்றது. இந்தப் பிளோரீனுடைய இரகசியம் என்ன? இதுலோகத் தன்மையற்ற செயற்கை மாப்போன்றது. குடிநீரும் உணவும்போல பிளோரீன் மனித உடலினுள் செல்கின்றது. இது பல்லின் மினுக்கத்தினைப் பலப்படுத்தி, பற்களை உறுதியானவைகளாக வளர்த்து சூத்தைக் கிரிமிகளின் ஆக்கிரமிப்பினை எதிர்க்கின்றது. மேலும் இவ்வாறு நீருடன் சேர்ந்து நாம் பிளோரீனை மிகவும் சொற்ப அளவில் தான் எமதுஉடலுக்குள் செலுத்துகின்றோம்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் ஆராய்ச்சிக் குழுவின் தலைவரான பேராசிரியர் வால்டர்குன்சல் ஆராய்ச்சிக்குப் பிற்பாடு, இன்று பல்சூத்தையினால் பாதிக்கப்படாத வயது வந்தவர்கள் மிகவும்குறைவானவர்கள் என்றே டுசுப்படுத்தியுள்ளார். இவ்விஞ்ஞானி தொடர்ந்து அதிகரித்து வரும்பல்சூத்தைநோய்க்குக் காரணம் மக்கள் உணவுகளிலும், வாழ்விலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களே எனப் புரியவைத்துள்ளார்.


### வெற்றிகரமான பரிசோதனை

சமீபகாலத்தில் சாக்சனியில் உள்ள கார்ல்-மாக்ஸ்-ஸ்ராட்ற் என்ற கைத்தொழில் நகரத்தினில் பரந்த அளவில் ஓர் பரிசோதனை புது அனுபவங்களைப் பெறுவதற்காக நடாத்தப்பட்டது. 300,000 மக்களுக்கு நீர்விநியோகிக்கும் வடிநீர்க்குழாயில் சரியான பிரமாணமளவு பிளோரீன் கலக்கும் ஓர் நீர்க்குழாய் மிகுந்தசெலவில் நிறுவப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பின்பு அந்நகரில் உள்ள சனங்களைப் பரிசோதித்தபோது ஐந்து தொட்டு பத்துவயதுக்குட்பட்ட அந்நகர மக்களின் சிறுவர்கள் மத்தியில் சுமார் 50 வீதம் 60 வீதம் பல்சூத்தை குறைந்துகொண்டது. அத்துடன் ஒழுங்கானமுறையில் பாடசாலைப் பிள்ளைகளை பல் வைத்தியர்கள் பரிசோதனை நடாத்தியதால் சூத்தைப் பற்கள் வேறும்பலவிதமான வியாதிகளை உருவாக்குவதற்கு மூலகாரணமாக உள்ளது எனவும் அறிய முடிந்தது.

கார்ல்- மாக்ஸ்- ஸ்ராட்றில் நடைபெற்ற பரிசோதனை, உலக மக்களின் அபிப்பிராயத்தினை ஈர்க்கத்தவற

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'சமூக ஏற்றத்தாழ்வு அகற்றப்படவேண்டும்'

## திருமுறை விழாவில் பேச்சு

கைதடி, வெள்ளி

'சமுதாயத்திலே பலமூடக் கொள்கைகள் பரவி இருக்கின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. இத்தகைய மூடக்கொள்கைகள் நீங்கவேண்டுமாயின் சைவத்தையும் சமுதாயத்தையும் இணைத்துச் சேவைபுரிய வேண்டும்'

தென்மராட்சிமேற்கு திருஞானசம்பந்தர் சபையின் ஆதரவில் தனங்கிளப்பு குருசாமி வித்தியாசாலையில் முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் திருமுறை விழாவில் கைதடி இந்துவாலிபர் சங்கப் பிரதிநிதி திரு. இ. வேலாயுதர் கலந்துகொண்டு சொபொழி வாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இன்று நம் மதத்தில் பலியிடுதல், சமூக ஏற்றத்தாழ்வு போன்ற மூடக்கொள்கைகள் பரவியிருக்கின்றன. சமூகஏற்றத்தாழ்வு எமது மதத்திலே தொன்று தொட்டுவந்ததல்ல. அது இடையிலே புகுத்தப்பெற்றது. பலியிடுதலும் அத்தகையதே. இவற்றை நீக்குவதற்கு திருமுறை விழாக்கள் பயன்படவேண்டும் என்று கூறினார்.

விழாவில் வித்துவான் மு. சபாரத்தினம், செ. அமிர்தலிங்கம், பொ. நமசிவாயகம் ஆகியோரின் விரிவுரைகளும் ஆலயப்பிரசாரகர் சி. சரவணமுத்துவின் 'திருமுறை தந்த ஞானக்கன்று' என்னும் பொருள்பற்றிய கதாப்பிரசங்கமும் இடம்பெற்றன.

கைதடி சங்கீத வகுப்பு மாணவர்களின் இன்னிசை விருந்தும், எருதிடல் தமிழ்க்கலவன் பாடசாலையின் 'பலியும் பாவமும்' என்ற சமய நாடகமும் இடம்பெற்றன.

## 'நானேபிரதமர்'

### சுகர்ணோ அறிவிப்பு

சிங்கப்பூர், ஜூலை 29

இந்தோனேஷியாவின் புதியமந்திரிசபையை நிறுவும்போது, ஜனாதிபதி சுகர்ணோ தானே இன்னும் இந்தோனேஷியாவின் பிரதமர் எனத்தெரிவித்தார். ஆனால் இதற்கு ஒருவாரம் முன்னர் இராணுவத்தலைவர் ஜெனரல் சுஹார்டோ பிரதமர் பதவி ஒழிக்கப்பட்டுவிட்டதாக அறிவித்திருந்தார்,

## தங்கக்கட்டுப்பாடு ரத்தாகுமா?

புதுடில்லி, ஜூலை 29

தங்கக்கட்டுப்பாட்டை ரத்துச்செய்வதா அல்லது திருத்தம் செய்வதா என்பது குறித்து மந்திரிசபை ஆராய்ந்துவருகிறது.

## படவிமர்சனம்

# சித்தி

மகான்

ஒரு படம் வெற்றி பெறுவதற்கு என்னவேண்டும்? நல்ல கதை அமைப்பா அல்லது தரமான நடிகர்களா? தத்ரூபமான கதை அமைப்புடன் சில தரமான நடிகர்களும் சேர்ந்துவிட்டால்......? இதைத்தான் ''சித்தி'' காட்டுகிறது! மாற்றாந்தாய் (சித்தி) என்றால் கொடுமைக்காரி என்றுதான் அர்த்தமா என்பதற்கு இப்படம் விளக்கம் கொடுத்துவிடுகிறது.

''சித்தி''யில் சிறப்பான அம்சம்— பத்மினியின் தத்ரூபமான நடிப்பாகும். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் (முதற் தடவையாக நடிக்கும்) பத்மினியின் நடிப்பு, நெஞ்சத்தையே பிழிந்துவிடுகிறது. தம்பியிடம் குடும்பக் கஷ்டங்களைச் சொல்லவேண்டாமம்மா என்று தாயிடம் கெஞ்சும்பொழுது அந்த முகத்தில் ஏற்படும் மாறுதல்கள்...... உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் அந்த நடிப்பு...... மெய் சிலிர்க்கவைத்துவிட்டது!

முத்துராமன், புதுமுகம் விஜயநிர்மலாவின் காதல் காட்சிகள் கண்களுக்கு விருந்தாகவிருக்கின்றன. சிறிது குறைத்திருக்கலாம்.

நாகேஷின் நடிப்பு சித்தியில் சிறப்பாகவிருக்கிறது. ஜெமினி வந்து போகிறார். ராதாவின் அமைப்பில் மாற்றமில்லை. பாட்டுக்களும் நினைவிலில்லை. கதை, வசனம், டைரக்ஷனை ஏற்றுள்ள கே எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு 'சித்தி' ஒரு முத்திரை கொடுத்துவிட்டது. நல்ல நடிப்பு' தரமான கதை விரும்பும் எல்லோருக்குமே சித்தி - ஒரு விருந்து. குடும்பத்துடன் சென்று பார்க்கக்கூடிய இப்படம்; யாழ்ப்பாணம் ராணியில் ஓடிக்கொண்டிருக்கிறது.

## அல்பேர்ட்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தையும் இன்னும் பலபரிசுகளையும் பெற்றார். அவர் தமது இறுதிக் காலத்தில் ஐக்கியவெளித்தத்துவத்தை (UnTheolrfidefiiy) pe வெளியிட்டு. அக்கொள்கையை மேலும் ஆராய்வதிலேயே தமது நேரத்தைச் செலவிட்டார். நியூட்டனுக்குப் பிறகு தோன்றிய உலகின் மாபெரும் விஞ்ஞானியாகிய டாக்டர் ஐயன்ஸ்டீன் தமது 76-வது வயதில், 1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அமரரானார்.

## பற்களைப்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

-வேயில்லை. அனேக உலக விஞ்ஞானிகளும் டாக்டர்களும் பரிசோதனை நிலையத்திலிருந்து செய்திகளையும் விபரங்களையும் சேகரிக்கின்றார்கள். அவர்கள் ஜேர்மன் ஜனநாயக் குடியரசில் நடைபெற்ற இந்தப் பரிசோதனை தங்கள் நாடுகளிலும் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனத் தங்கள் பாராட்டுதல்களைத் தெரியக் கொடுத்தார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது கோஷ்டிகள் பிரதமரை சந்திக்கும்

## யாழ்ப்பாணம் வரும் பிரதமரின் நிகழ்ச்சி விபரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திற்கு அடுத்த மாதம் 9-ம் திகதி விஜயம் செய்யும் பிரதமர் திரு டட்லிசேனநாயகாவை அன்று பிற்பகல்பல தொழிற் சங்கங்களின் தூதுகோஷ்டிகள் பேட்டிகாணவிருக்கின்றன. அன்று மாலை 5 மணிக்குப் பிரதமர், இங்குவரும் மந்திரிகளுடன் பாஷையூருக்கு விஜயம் செய்வார்.

பிரதமரின் நிகழ்ச்சிநிரல் தயாராகிவிட்டன. விமான நிலையத்தில் விசேஷமாக அமைக்கப்படும் அலங்கார மேடையில் முதலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில்வரவேற்பளிக்கப்படும். இதனைத் தொடர்ந்து, விமானநிலையச் சந்தியில் மூன்று சிகரங்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் பிரதமருக்கும், மந்திரிகளுக்கும் வரவேற்பு அளிக்கப்படும்.

பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம்வரை ஒவ்வொரு சந்தியிலும் அமைக்கப்பட்டிருக்கும் அலங்காரப் பந்தலில் வரவேற்பளிக்கப்படும். அன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலிருந்து பெரியகடை வீதிகள் வழியாக அலங்கார ரதத்தில் பிரதமரும், மந்திரிகளும் அழைத்துச்செல்லப்படுவார்கள்.

பிரதமர் விஜயத்தின் நிகழ்ச்சிநிரல் வருமாறு: காலை 9 மணிக்கு இரு விசேஷவிமானங்களில், பிரதமரும் மந்திரிகளும், விமான நிலையத்தை வந்தடைவார்கள். தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மாலைசூட்டி வரவேற்பார். இதனைத்தொடர்ந்து தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம், நிர்வாகக் காரியதரிசி திரு. ரி. சங்கரப்பிள்ளை, வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம். சம்மேளனப் பிரதிநிதி ஆகியோர் மாலைசூட்டி வரவேற்பார்கள்.

இதன்பின் மற்றும் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மாலைசூட்டி வரவேற்று வரவேற்பு அளிப்பார்கள். காலை 9-30மணிக்கு, தமிழ்க் காங்கிரஸினால் வரவேற்பு அளிக்கப்படும். காலை 10 மணிக்கு விமானநிலைய சந்தியில் வரவேற்பளிக்கப்படும். காலை 11 மணிக்கு மோட்டார்பவனி ஊர்வலம் ஆரம்பமாகி பலாலிவீதி வழியாக யாழ்ப்பாணத்தை வந்தடையும்,

நண்பகல் 12-30 மணிக்கு 'பாம்கோட்'டில் பிரதமருக்கும், மந்திரிகளுக்கும் விருந்து அளிக்கப்படும். பிற்பகல் 2-30 மணிக்கு, பாஷையூரைச் சேர்ந்தவர்களின் தூதுக் கோஷ்டி, மற்றும் தொழிற் சங்கங்கள், சுருட்டுத் தொழிலாளர், நாவாந்துறைவாசிகள், தூதுக்கோஷ்டிகள் பிரதமரைச் சந்திக்கும் மாலை 4 மணிக்கு நாச்சிமார் கோவிலடியிலிருந்து அலங்கார ரதத்தில் பிரதமரும், ஊர்வலமாகப் பெரியகடை வீதிகள் வழியாக அழைத்துச்செல்லப்படுவார்கள். மாலை 5 மணிக்குப் பிரதமரும், மந்திரிகளும் பாஷையூருக்கு விஜயஞ்செய்வார்கள். மாலை 5-30க்கு கோட்டை முற்றவெளி மைதானத்தில் கண்ணன் கோஷ்டியினரின் நிகழ்ச்சி இடம்பெறும். மாலை 6-30 மணிக்குப் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். இரவு 10 மணிக்கு வாணவேடிக்கை நடைபெறும்.

பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் வருமாறு: வவனியா எம், பி. திரு. ரி. சிவசிதம்பரம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகும். திரு. ரி. சிவசிதம்பரம் வரவேற்புப்பத்திரம் வாசித்தளிப்பார். திரு. ரி. சங்கரப்பிள்ளை தீர்மானங்களைத் தமிழில் தெரிவிப்பார். தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் சொற்பொழி வாற்றுவார்கள்; பண்டிதர் இளமுருகனார் சொற்பொழிவாற்றுவார். யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சொற்பொழிவாற்றுவார். இதன்பின் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சொற்பொழி வாற்றுவார்.

### நன்றி நவிலல்

திருமதி சண்முகம் தங்கம்மாவின் ஈமக்கிரியைகளில் 24-7-66-ல் நேரில் கலந்தும், தந்தி, தபால் மூலமும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். தனித்தனியே ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். குடும்பத்தினர் 64/4, றெயில்வே ஸ்டேசன் மேற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 806

### இளைஞர்களுக்குசமய அறிவு அவசியம்

தெல்லிப்பழை, வெள்ளி

இளைஞர்களுக்கு சமய அறிவு முக்கியத்துவம்வாய்ந்தது. மாணவர்களுக்கு சமயஅறிவும் பண்பாடும் இருக்குமேயானால் அது அவர்களது வாழ்வை நல்வழிப்படுத்தும், என்று வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச அம்பிகைபாகன் தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 20 வது ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்துபேசுகையில், சபையின் சமயப்பணி சிறந்ததென்றும், மேபடி சபையில் பதினாறுவயதிற்கு உட்பட்ட சிறுர்கள் சமய அறிவையும் பண்பாட்டையும் பெற்று வருகிறார்களென்றும் இவ்வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும் சமயபோதனை செய்வதற்குச்சபையினர் முயற்சிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

விழாவில் திருவாளர்கள் செ. சின்னத்தம்பி அ. சரவணமுத்து, எம். எல். சிதம்பரப்பிள்ளை' கே. சண்முகநாதன் ஆகியோரும்பேசினர்.

### பஸ் விபத்தில் 12 பேர் பலி

டெஹ்ரான், ஜூலை 29

வடகிழக்குஈரானில் மலைப்பாறையொன்றிலிருந்து கீழ்நோக்கிப் பாய்ந்த ஒரு பஸ்ஸில் 12 பிரயாணிகள் கொல்லப்பட்டனர். 25 பேருக்குக் காயமேற்பட்டது, (பி. டி. ஐ)

# புதிய வரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

### 70 கோடிக்கு கணக்கு

நிதி மந்திரிதமது வரவு-செலவுத்திட்ட உத்தேச மதிப்பீட்டில்வரவு செலவு போக 90 கோடியே 90 லட்சம் ரூபாய் துண்டு விழுமென நிதிமந்திரிஎதிர் பார்த்தபோதிலும் செலவினத்தில் இரண்டரைச் சதவிகிதம் செலவிடப்படமாட்டாதெனஎதிர்பார்ப்பதால் பன்னிரண்டரைக் கோடி ரூபாய் கணக்கில் சேர்க்கப்படாமல் மிகுதி துண்டுவிழும் தொகையான 78 கோடி 30 லட்சம் ரூபாயையும் சரிக்கட்டுவதற்கான யோசனைகளை நிதிமந்திரி தெரிவித்தார்.

### முதலீடு

புதிய நிதியாண்டில் அரசாங்கம் 76 கோடி ரூபாவை முதலீடுகளுக்கு பயன்படுத்துமென்று நிதிமந்திரி அறிவித்தார். 29 கோடி ரூபா விவசாய அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்தப்படும். 14 கோடியே 20 லட்சம் ரூபாய் கைத்தொழில் உற்பத்திகளுக்கும், 4 கோடியே 20லட்சம் ரூபாய் மீன்பிடித் துறைக்கும், 19 கோடி ரூபாய் பொருளாதார வளர்ச்சிக்கும் பயன்படுத்தப் படும்.

### சமூக சேவைகளுக்கு

சமூக சேவைகளுக்கு 12 கோடியே 10 லட்சம் ரூபாயும், 3 கோடியே 60 லட்சம் ரூபாய் இதர அம்சங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை முந்திய மூலதன ஒதுக்கீடுகளைவிட அதிகமென்று கருதப்படுகிறது. இது 14 கோடியே 20 லட்சம் ரூபாய் அல்லது 81சதவீதம் கடந்தஆண்டைவிட அதிகமென்று கருதப்படுகிறது.

### வருமானவரி

நிதிமந்திரி இன்று அளித்த வருமானவரிகளில் எதுவித மாற்றங்களும் காணப்படவில்லை. வரி விகிதங்களில் தாம் எந்த மாற்றமும் ஏற்படுத்தாததற்குக் காரணம் மிகவிரைவில் நியமிக்கப்பட இருக்கும் ஒரு கமிஷன் வரி அமைப்பு முறையை முற்றுகமாற்றி அமைப்பது குறித்து ஆலோசனைகள் கூறவிருப்பதுதான் என்று நிதி மந்திரி கூறினார்.

நிதிமந்திரி தோட்ட வரியில் ஒருதிருத்த அமைப்பை அறிவித்தார். மார்க்கட் பெறுமதியில் 50 ஆயிரம் ரூபாய்க்குகீழ்வரும் தோட்டங்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பரம்பரைச் சொத்துகளுக்கு உரிமைபெறும் குடும்பங்களுக்கு உதவுமுகமாகவே இந்த சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட் பெறுமதிஎன்ன என்ற அடிப்படையிலேயே இனிமேல் சொத்துக்கள்மீது தோட்ட வரிவிகிதம் கணிக்கப்படும்.

### இறக்குமதி கட்டணம்

மூலப் பொருட்களும் யந்திரசாதனங்களும் இறக்குமதியை மலிவாக்கும் நோக்கத்துடன் இறக்குமதிக் கட்டணங்கள் மாற்றி அமைக்கப்படும். தொழிலதிபர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இறக்குமதி செய்யப்படும் எல்லாவற்றுக்கும் பொதுவாக 31 சதவீதம் வரி அறவிடப்படும். இதன் அர்த்தம்என்னவென்றால் அனேக மூலப் பொருட்களின் இறக்குமதிக் கட்டணங்கள் வெகுவாகக்குறைக்கப்படும் என்பதே. முக்கிய கைத்தொழில் யந்திரங்கள் மீதான கட்டணங்கள் 20 சத விகிதத்திலிருந்து 10 சத விகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

### ஆடம்பரப்பொருள் மீதான வரி

ஆடம்பரப் பொருட்கள் மீது முன்னர் இருநூறு சதவிகிதமாகவும் முன்னூறுசதவிகிதமாகவும் இருந்த கட்டணவிகித நூற்றிஐம்பது சத விகிதத்துக்கு இறக்கப்படும். சில பொருட்களைப் பொறுத்தவரை வரிகள் பழையபடியே இருந்துவரும், புதியவரிகள் பற்றியும் வரி மாற்றங்கள் குறைப்புகள் பற்றியும் பின்னர் கஸட் அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படும்.

### பத்திரிகைக் காகிதம்

சிறியஅளவுநடுத்தரஅளவு பத்திரிகைக் காகிதங்கள், மோட்டார் வாகனங்கள், ரசாயனப் பொருட்கள் ஆகியவைவரிகுறைப்புகள் மூலம் பயன்பெறப்போகும் பொருட்களாகும்.

மண்ணெண்ணெய், மிளகாய், பம்பாய் வெங்காயம் சின்னவெங்காயம், கிழங்கு மற்றும் விவசாய உபகரணங்களான அலவாங்கு, மண்வெட்டிகள் போன்றவை முன்னர்போலவே விரிவிலக்குக்குள்ள பொருட்களாக இருந்துவரும்.

### ஆறு எம். பிக்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞராகும். இதனைக் கருத்திற் கொண்டே அரசாங்க கட்சி அங்கத்தவர் அப்படி கூறினர்.

#### சிங்கள பாதுகாப்வு இயக்கம்

இதற்கு முன்னர், பார்லிமெண்டில் சிங்கள மொழி உபயோகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு இயக்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

சபை நடவடிக்கைகள் சிங்களத்தில் நடைபெற வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் நோக்கமாகும். புரியாத மொழியில் யாரும் பார்லிமெண்ட் கூட்டத்தில் பேசினால் வெளிநடப்பு செய்வதும் இந்த இயக்கத்தின் ஒரு திட்டமாகும். எதிர்க்கட்சியைச் சேர்ந்த பதினாறு அங்கத்தவர்கள் இதற்கான ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

#### எதிர்க்கட்சியினர் பலர் வரவில்லை

எதிர்க் கட்சி அங்கத்தவர்கள் பலர் இன்று பார்லிமெண்டுக்கு வரவில்லை. ஓரளவு காலியான சபைக் கூட்டத்தில் தான் நிதி மந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா இன்று தமது பட்ஜட் உரையை நிகழ்த்தினார்.

பார்லிமெண்ட் அங்கத்தவர்களின் மனைவிமார்களோ அல்லது உறவினர்களோ இன்று பார்லிமெண்ட் பார்வையாளர் பிரமுகர்கள் கலரியில் காணப்படவில்லை. ஆனால் அதிகமான அளவில் ராஜதந்திரிகள் பார்வையாளர்கள் பிரமுகர்கள் கலரி [illegible]

# லாபத்தில் பங்கு எடுத்துச் செல்லலாம்

## வெளிநாட்டவருக்கு சலுகை

கொழும்பு, வியாழன்

வெளிநாட்டு வங்கிகளின் நாளாந்தகணக்குகள்பொது மக்கள்வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இந்தச்சலுகைகள் 1961-ம் ஆண்டுமுதல் ரத்துச்செய்யப்பட்டிருந்தது. இந்தத் தகவல் நிதிமந்திரியின்வரவு செலவுத்திட்ட அறிவித்தலின்போது வெளியாகியது.

புதிய நிதி ஆண்டில் 3500 ஏக்கர்நிலம் நீர்ப்பாசனத்தின்கீழ் கொண்டுவரப்படும். இந்தக்காணிகளில் மிளகாய் சின்னவெங்காய போன்றவை பயிரிடப்படும். இந்த நிலங்களில் 815 ஆயிரம் அந்தர் உருளைக்கிழங்கும் 10 ஆயிரம் அந்தர் மிளகாயும் 4500 அந்தர் நிலக்கடலையும் பயிரிடப்படும். இந்த நிலத்தில் 35 ஆயிரம் ஏக்கர்வரை குத்தகைக்கு தனிப்பட்டவர்களுக்கு விடப்படும்.

புதியநிதி ஆண்டிலிருந்து வெளிநாட்டு மூலதனக்காரர்தமது லாபத்தில் பங்குகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அடுத்த ஆறு மாத காலத்தில் மூன்றரைக் கோடி ரூபாய் வீதம் லாபத்தில் பங்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

அரசாங்க சேவைகளில் உள்ள குறைபாடுகள்யாவும் நீக்கப்படும் என்று நிதிமந்திரி அறிவித்தார்.

#### புதிய முத்திரைகள்

போயா தினங்கள் விடுமுறையாக்கப்பட்டதைக் கொண்டாடுமுகமாக 4 புதிய முத்திரைகள் இந்த ஆண்டில் வெளியிடப்படவிருக்கின்றன. தேசிய ஆராய்ச்சி சபைகளும் ஆலோசனைச் சபைகளும் அமைக்கப்படும். இவைகளில் பொதுமக்களுக்கும் இடம் கொடுக்கப்படும்.

நிதிமந்திரி தமது புதிய வரவுசெலவுத் திட்டத்தை அபிவிருத்தித் திட்டம் என்று வர்ணித்தார்.

### வழிப்பறி பணத்தில்....

யாழ்ப்பாணம், சனி

வியாபாரி ஒருவரிடம் பணத்தைத் தட்டிச் சென்றவர்கள், மதுபானக் கடையொன்றில், நன்றாகக் குடித்துவிட்டு அதன்பின் ஹோட்டலொன்றில் வயிறு நிறையச் சாப்பிட்டனராம்.

இதுசம்பந்தமாக நடந்த பொலிஸ் விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. கல்வியங்காட்டிலுள்ள வியாபாரியொருவரிடமிருந்து பணப்பையை சிலர் அபகரித்தனராம். இத்தகவல் கிடைத்ததும் உடனடியாகப் பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர். அதன்பயனாக நால்வர் அகப்பட்டுக் கொண்டனராம்.

யாழ்ப்பாணம் பொலிஸை சேர்ந்த குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. சிவபாதம் எடுத்த திடீர் நடவடிக்கையின் பயனாக நால்வர் சந்தேகத்தின்மீதுகைது செய்யப்பட்டுக் காவல் வைக்கப்பட்டுள்ளனர்.

(நநி)

### 50ரூபா அபராதம்

பொலநறுவ, வெள்ளி

லைசென்ஸ்இல்லாமல்பியர் விற்றதாக கவுறுவைச் சேர்ந்த கே. பி. ஜெயசிங்கா மீது குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில், பொலநறுவ மாஜிஸ்டிரேட் 50 ரூபா அபராதம் விதித்தார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org